உ

ஸ்ரீ காமாட்சியம்மன் துணை







**கரூர் - பஞ்சமாதேவி**

# ஸ்ரீ காமாட்சி அம்மன் திருக்கோவில்
# கும்பாபிஷேக 22வது - ஆண்டு விழா
# கோ பூஜை, மஹா சண்டி ஹோமம்
# சுவாமி திருக்கல்யாணம் மற்றும் சுமங்கலி பூஜை,
# விழா அழைப்பிதழ்

**20.08.2025 மற்றும் 21.08.2025 - புதன் மற்றும் வியாழக்கிழமை**

ஓம் மாதா மஹா சைலம்
மஹஸ்த்தா துபிதா மஹம்,
காரணம் ஜகதாம் வந்தே,
கண்டாது பரிவாரணம்.

பேரன்புடைய பக்த கோடிகளே !

அங்கிங்கெனாதபடி நீக்கமற நிறைந்து கருணையான கண்களினால் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் அன்னை ஸ்ரீ காமாட்சி அம்மன் குடிகொண்டிருக்கும் 500 ஆண்டுகளுக்கு மேல் பழமையான கரூர் – பஞ்சமாதேவி அமராவதி ஆற்றின் வடகரையில் எழுந்தருளியுள்ள பெருமைமிகு ஸ்ரீ காமாட்சி அம்மன் ஆலயமானது மிகவும் சிதிலமடைந்து ஏறக்குறைய மண்மேடாக ஆக கூடிய நிலையில் இருந்தது.

நல்இதயம் படைத்த சான்றோர்கள், ஆன்றோர்கள், குடிப்பாட்டுக்காரர்களின் பேருதவியுடன் ஆலயம் 100 % முழுமையாக புனரமைக்கப்பட்டதோடு நடைபாதையாக 1 அடி அகலமே இருந்த வழித்தடத்தை 20 அடி தார்சாலையாக மாற்றி பக்தர்கள் எளிதாக வாகனங்களில் வந்துசெல்ல தகுந்த அளவில் விரிவாக்கம் செய்யப்பட்டு கடந்த 2003 ஆம் ஆண்டு முதல் கும்பாபிஷேகமும், ஆகம சாஸ்த்திர முறைப்படி 12 ஆண்டுகள் கடந்து கோவிலின் முன்புறம் மிகப்பெரிய மண்டபம் அமைத்து, பரிவாரசுவாமிகளுக்கு கோபுரம் அமைத்து, அனைத்து வசதிகளுடன் திருமண மண்டபமும், முன்புறம் முழுமையாக கான்கிரீட் தளமும் அமைத்து மிக பிரம்மாண்டமான அளவில் **2016** ம் வருடம் இரண்டாவது மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

'ஆலயம்' என்பது புனரமைக்கப்படுவதோடு இல்லாமல் சாஸ்த்திர முறைப்படி 3 கால பூஜை நிகழ வேண்டும் என்பது மஹா சுவாமிகளின் விருப்பமாகும். மாமுனிவர்களின் எண்ணத்திற்கேற்ப அருள்மிகு ஸ்ரீ காமாட்சி அம்மன் ஆலயத்தில் கடந்த 22 ஆண்டுகளாக மூன்று கால பூஜை, அன்னதானத்துடன் பௌர்ணமி பூஜை, நவராத்திரி பூஜை, சிவராத்திரி பூஜை, நவக்கிரஹ வழிபாடு என மிகவும் சீரும் சிறப்புமாக நடைபெற்று வருவதோடு, முழுமையான சுத்தத்துடன் ஆலயம் விளங்கி வருகின்றது.

வருகின்ற சுபஸ்ரீ நிகழும் மங்களகரமான விசுவாவசு வருடம் ஆவணி மாதம் 4-ம் தேதி மற்றும் 5-ம் தேதி (20.08.2025 மற்றும் 21.08.2025) புதன் மற்றும் வியாழக்கிழமை நிகழ்ச்சி நிரல்படி கோ பூஜை, மஹா சண்டி ஹோமம், சுவாமி திருக்கல்யாணம், சுமங்கலி பூஜை, மற்றும் 22 – வது ஆண்டு விழா வழக்கமான நாதஸ்வரம், தவில் இசையுடன், பாமாலை, பூமாலை இசை மழையுடன் விசேஷ ஹோமங்கள், மஹா அபிஷேகங்கள் மற்றும் மஹா தீபாராதனை சிறப்பாக நடைபெற உள்ளது.

**கோ பூஜை :** நாடும் ஊரும் பக்தர்களும் மேன்மையடைய கோ பூஜை நடைபெறும்.

**சுமங்கலி பூஜை :** சுமங்கலி பூஜை நமது ஆலயத்தில் ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இப்பூஜையில் நேரில் கலந்துகொள்ளும் சுமங்கலிகளுக்கு மங்கள பொருட்கள் வழங்கப்படும். இப்பூஜைக்கான செலவுத்தொகை ரூ. **200 /-** மட்டுமே.

**மஹா சண்டி ஹோம பலன்கள் :** சண்டி என்றால் சொன்னால் முரண்பாடு என்பது பொருள். ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையில் பதினாறு செல்வங்கள் தேவை. இந்த பதினாறு செல்வங்களையும் முப்பெரும் சக்திகளாக விளங்கும் துர்க்கா, லஷ்மி, சரஸ்வதி எனும் முப்பெரும் அம்பிகைதான் எல்லா உயிரினங்களுக்கும் நன்மைகளை தரவல்லவர்கள். அப்படிப்பட்ட கல்வி, செல்வம், வீரம் எனும் முப்பேறுகளையும் தந்து, நல்ல வாழ்க்கையையும், நீண்ட ஆயுளையும், நோய் அற்ற வாழ்வையும், மக்கட்பேறுகளையும், நல்ல அமைதியான மன நிலைகளையும், எதிரிகளின் சூழ்ச்சியில் இருந்து விடுபடவும், திருஷ்டி உபத்ரவத்தையும், திருமணத்தடையை நீக்கி நல்ல கணவன், மனைவி அமைவதற்கும், " **கலோ சண்டி விநாயகௌ, பவானீ சரோஜீ துர்க்கா** " என்ற வாக்கியப்படி கலியுகத்திலே சண்டிகா பரமேஸ்வரி என்ற பெயருடன் அம்பிகையை குறித்து வழிபாடு செய்து எல்லா நலன்களையும் பெறவே மஹா சண்டி ஹோமம் நடத்தப்படுகிறது. குறிப்பாக சைவ சமயத்தின் தலைசிறந்த யாகம் **மஹா சண்டியாகம்** என்பது குறிப்பிடத்தக்கது.

**பராமரிப்பு பணி :** நமது கோவிலில் வருடாந்திர பராமரிப்பு பணிகள் துவங்கி நடைபெறுகின்றது. குறிப்பாக ... சுவர் பெயிண்டுகள் உரிந்து வந்துள்ளன, மீண்டும் இது மாதிரி உதிராமல் நவீன முறையில் பெயிண்ட் அடிக்கப்படுகிறது. கோபுரத்தில் உள்ள சிலைகள், நுழைவு வாயிலிலுள்ள சிலைகள் பழுதடைந்துள்ளது. அதனை மீண்டும் சீரமைக்கப்படுகிறது. பழுதடைந்த எலக்ட்ரிக் ஒயர்கள், கேமரா சாதனங்கள் மற்றும் குடிநீர் பைப் குழாய்கள் பழுது நீக்கி புதுப்பிக்கப்படுகிறது.

நிகழ்ச்சி நிரல்

| நாள் | நேரம் | நிகழ்ச்சி விபரம் |
|---|---|---|
| விசுவாவசு வருடம் ஆவணி மாதம் 4 - ஆம் நாள் (20.08.2025) புதன்கிழமை | மாலை 7.00 மணிக்குமேல் இரவு 10.00 மணிக்குள் | அனுஞ்ஞை விக்னேஷ்வரபூஜை, மஹா சங்கல்பம், புண்யாகம், புஸ்த்தக பூஜை, மாத்ருகா பூஜை, சப்தசதி பாராயணம், 64 யோகினிபலி, 64 பைரவர்பலி, மஹா தீபாரதனை, பிரசாதம் வழங்குதல் மற்றும் அன்னதானம் வழங்கப்படும். |
| ஆவணி மாதம் 5 - ஆம் நாள் (21.08.2025) வியாழக்கிழமை | காலை 8.30 மணிக்குமேல் 12.00 மணிக்குள் | மஹா கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், 13 அத்தியாய ஹோமங்கள், நவகன்யா பூஜை, சுமங்கலி பூஜை, தம்பதி பூஜை, வடுக பூஜை, ப்ரம்மசாரி பூஜை, கோ பூஜை, அஸ்வ பூஜை, ஷன்னாவதி ஹோமங்கள், **" வஸோத்தாரா ஹோமம் "** |
| | மதியம் 12.00 மணிக்குமேல் 1.00 மணிக்குள் | மஹா பூர்ணாஹுதி, கடம் புறப்பாடு, கலசாபிஷேகம், சுவாமி திருக்கல்யாணம், மஹா தீபாரதனை, பிரசாதம் வழங்குதல், **சிறப்பு அன்னதானம் .** |

மஹா சண்டி ஹோமத்தில் கலந்துகொள்ள ரூபாய் 3000/- மற்றும் சுவாமி திருக்கல்யாணத்தில் பங்குபெற ரூபாய் 2000/- நிதியுதவி வழங்கி அம்மன் அருள்பெற வேண்டுகிறோம்.

அது சமயம் குடிப்பாட்டுக்காரர்களும், பக்தகோடிகளும் தங்களால் இயன்ற நன்கொடைகளை அளித்து அம்மன் அருள்பெற வேண்டுகிறோம். மேலும் பக்தகோடிகள் தவறாது ஆண்டு விழாவில் கலந்துகொண்டு எல்லாம் வல்ல ஸ்ரீ காமாட்சி அம்மன் மற்றும் அனைத்து பரிவார சுவாமிகளின் அருளைப்பெற அன்புடன் அழைக்கின்றோம்.

**நிதி அளிக்கும் முறைகள் :**

கோவில் பூசாரி வசம் நன்கொடை கொடுத்து கோவிலில் உள்ள நோட்டு புத்தகத்தில் எழுதி கையொப்பம் செய்யவும். இரசீது அனுப்பிவைக்கப்படும்.

DD எடுக்க வேண்டிய முறை **" Sri Kamakshi Amman Temple " Payable at Karur.**

நேரடியாக **Bank of Baroda** வங்கியில் செலுத்தலாம் / **Online** மூலமாகவும் செலுத்தலாம்.

வங்கியின் பெயர் : **Bank of Baroda** — வங்கி கணக்கு எண் : **83610200003061**

கணக்கின் பெயர் : **Sri Kamakshi Amman Temple** — **IFSC Code : BARB0VJKARU - Fifth Letter ZERO**

**குறிப்பு :**

வங்கியில் பணம் செலுத்திய பிறகு 96559 56440 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு தெரிவிக்கவும். இரசீது உடனடியாக அனுப்பிவைக்கப்படும்.

ஸர்வஸாதகர் :
கரூர் " சிவஆகமவிசாரத் "
" வேதப்ரம்மா " " சிவாச்சார்ய திலகம் " " சிவஆகமபூஷணம் "
**சிவஸ்ரீ M. முரளி சிவாச்சாரியார்**
வேத சிவஆகம பாடசாலை முதல்வர், கரூர்.
செல் : 98430 60915

இப்படிக்கு
அருள்மிகு ஸ்ரீ காமாட்சி அம்மன் திருக்கோவில் விழாக் குழுவின் சார்பாக
**எஸ். சிதம்பரம்,**
ஒருங்கிணைப்பாளர், பஞ்சமாதேவி, கரூர் - 639 004.
98430 56440
E.mail : rtnchidambaram@gmail.com

nanban